

விழுப்புரம் தெற்கு மாவட்டம், திருக்கோவிலூர் சட்டமன்றத் தொகுதியில் நடைபெற்ற “உங்களுடன் ஸ்டாலின்” முகாமில் முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ. கலந்து கொண்டு பயன்பெற்ற பயனாளிகளுக்கு உரிய ஆணைகளை வழங்கினார். நிகழ்ச்சியில் விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# எதிர்க்கட்சி தலைவரின் நாக்கும் நாடகம் போடுகிறது!

## தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா அறிக்கை

சென்னை, ஜுலை 31-

எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமியின் நாக்கும் நாடகம் போடுகிறது என்று தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து டி.ஆர்.பி. ராஜா அறிக்கை வருமாறு:-

ஒரு சில நாட்களுக்கு முன்பு “முதலமைச்சர் அவர்கள் பூரண நலம் பெற வேண்டும்” என “சுந்தரா டிராவல்ஸ்” யாத்திரையில் சொன்ன அதே எதிர்க்கட்சி தலைவரின் நாக்குதான் இப்போது ‘ஆஸ்பத்திரியில் டேபிள் மீட்டிங்’ என நர்த்தனம் ஆடுகிறது. அது சரி பொதுவாக எல்லோரும் டேபிள் முன்பு அமர்ந்துதான் மீட்டிங் போடுவார்கள் என்பது தெரியாமல்தானே பழனிச்சாமி பாவம் டேபிளுக்கு அடியில் மீட்டிங் போட்டார்!

அரசு அலுவல்கள் அனைத்தும் தடையின்றி நடைபெறுகிறதா என அதிகாரிகளை அழைத்து ஆய்வு செய்வது, “உங்களுடன் ஸ்டாலின்” எனும் மகத்தான திட்டத்திற்கான முகாம்கள் திட்டமிட்டபடி நடைபெறுகிறதா என தலைமைச் செயலாளர் உள்ளிட்ட உயர் அதிகாரிகளிடம் விவரங்கள் கேட்பது, காணொளிக் காட்சி வாயிலாக கலெக்டர்களுடன் ஆலோசனை நடத்துவது. பொதுமக்களுடன் வீடியோ காலில் பேசி முகாமின் செயல்பாடுகள்திட்டமிட்டபடி மக்களுக்கு சென்றடைகின்றனவா என்று நேரடியாக பயனாளிகளிடம் கேட்டறிதல், பிரதமர் மோடியின் தமிழ் நாட்டுப் பயணத்தின் போது மாநிலத்தின் வளர்ச்சிக்காக நாம் பெற வேண்டிய திட்டங்களுக்காக கடிதம் தயார் செய்து அனுப்பி வைத்தது என மருத்துவர்களின் அறிவுறுத்தலின்படி சில நாட்கள் மருத்துவமனையில் இருந்த போதும் தொடர்ந்து தடையின்றி தனது மக்கள் பணியை செய்தார் திராவிட நாயகன் நமது முதலமைச்சர் அவர்கள்!



ஸ்டெர்லைட்டுக்கு எதிராகப் போராடியவர்கள் மீது துள்ளத் துடிக்கத் துப்பாக்கிச் சூடு நடத்தி 13 பேரைப் பலி வாங்கிவிட்டு, “டிவியில் பார்த்துத்தான் தெரிந்து கொண்டேன்” எனச் சொன்னவர் தான் இந்த எதிர்க்கட்சித் தலைவர்.

எந்த காலத்திலும் உருப்படியாக முதலமைச்சர் பணிகளையே செய்யாத எதிர்க்கட்சித் தலைவருக்கு இவையெல்லாம் ஆச்சரியமாகத்தான் இருக்கும். “அம்மா இட்லி சாப்பிட்டார்; செவிலியர்களுடன் பந்து விளையாடினார்; விரைவில் வீடு திரும்புவார்; டிவி பார்த்தார்; கிச்சடி சாப்பிட்டார்; நர்ஸ்களுக்குப் பரிசு கொடுத்தார்; டாக்டர்களுக்கே அறிவுரை கூறினார்” என்றெல்லாம் திரைக்கதை எழுதி நாடகம் போட்டவர்களே உங்கள் தரம் தாழ்ந்த எண்ணங்களை உலகிற்கு பறைசாற்றாதீர்கள்!

அம்மையார் ஜெயலலிதா அவர்கள் இருக்கும் வரை ஒன்றிய அரசின் ‘உதய் மின் திட்டத்தில்’ அவர் கையெழுத்து போடவில்லை. அவர் மறைந்த பிறகு ஓடோடிப்போய் கையெழுத்து போட்டு தமிழ்நாட்டை வஞ்சித்தது சந்துகளில் இருந்து குரல் கொடுக்கும் ஷாக்ஷாத் திரு.பழனிசாமிதான் என்பது ஊருக்கே தெரிந்தபோதும் இன்று அவரே “மின்கட்டணம் உயர்ந்து விட்டது” என நீலிக் கண்ணீர் வடித்திருக்கிறார்.

இப்படி, தானே ஏற்றிய மின்கட்டண உயர்வைக் குறித்து தானே பேசிவரும் பழனிசாமி, ஒன்றிய அரசின் சமையல் எரிவாயு சிலிண்டர் விலை குறித்து ஏன் பேச அஞ்சுகிறார்? 2014ம் ஆண்டு ரூ.414ஆக இருந்த சமையல் காஸ் சிலிண்டர் விலை தற்போது ரூ.868.50ஆக உயர்ந்து வளர்ந்து நிற்பது எதிர்க்கட்சித் தலைவருக்குத் தெரியாதா? அல்லது எப்போதும் போல நடிக்கிறாரா?

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

### ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன் தலைமை!

# மேல்மலையனூரில் ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாம்!

## முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

செஞ்சி, ஜுலை 31-

விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஒன்றியம் மேல்மலையனூர் ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு மேல்மலையனூர் ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன் தலைமை தாங்கினார். வட்டார கல்வி குழு தலைவர் நெடுஞ்செழியன் முன்னிலை வகித்தார். வட்டார வளர்ச்சி அலுவலர் ஜெய்சங்கர் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ கலந்து கொண்டு உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தினை தொடங்கி வைத்து பொது மக்களிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்களைப் பெற்று கணினி மூலம் பதிவு செய்வதற்கு அவர் அறிவுறுத்தினார். முகாமில் பெறப்பட்ட மனுக்களுக்கு உடனடியாக தீர்வு காண வேண்டுமென அவர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். தொடர்ந்து வேளாண்மை திட்டத்தின் மூலம் விவசாயிகளுக்கு வேளாண்மை கருவிகளை அவர் வழங்கினார்.

முன்னதாக மருத்துவம் மற்றும் நல்வாழ்வுத்துறை மூலம் மேல்மலையனூர் ஆரம்ப சுகாதார மருத்துவமனை சார்பில் கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்துடன் கூடிய பெட்டகத்தினையும், ரத்த அழுத்தம், நீரழிவு நோய் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு மக்களை தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் மருந்து மாத்திரைகள் அடங்கிய பெட்டகத்தினை அவர் வழங்கினார்.

முகாமில் மேல்மலையனூர், தொரப்பாடி ,தென்பாலை, வடபாலை ஆகிய ஊராட்சிகளில் இருந்து ஏராளமான பொதுமக்கள் முகாமில் கலந்து கொண்டு கலைஞர் மகளிர் உரிமைத்தொகை, முதியோர் ஓய்வூதியம், இலவச வீட்டு மனை பட்டா, குடும்ப அட்டை கேட்டு மனு செய்தனர்.

நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செந்தமிழ்ச் செல்வன், வட்டாட்சியர் தனலட்சுமி, வளத்தி வட்டார ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலர் டாக்டர் வெங்கடேசன், முகம் கண்காணிப்பாளரும், உதவி செயற்பொறியாளர் யாசின், ஒன்றிய செயலாளர்கள் நாராயணமூர்த்தி, சாந்தி சுப்பிரமணியன், ஒன்றிய துணை சேர்மன் விஜயலட்சுமி முருகன், ஒன்றிய கவுன்சிலர்கள் யசோதரை சந்திரகுப்தன், தக்ஷிணாமூர்த்தி, ஊராட்சி மன்ற தலைவர்கள். உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள், தி.மு.க. நிர்வாகிகள் பொதுமக்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

வட்டார வளர்ச்சி அலுவலர் சீத்தாலட்சுமி அனைவருக்கும் நன்றி கூறினார்.



கழகத் தலைவர், முதலமைச்சர் தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்க, விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன் விழுப்புரம் மத்திய மாவட்டம், விழுப்புரம் சட்டமன்ற தொகுதி, கோலியனூர் தெற்கு ஒன்றியம், கண்டமானடி ஊராட்சியில் நடைபெற்ற “உங்களுடன் ஸ்டாலின்” முகாமை துவக்கி வைத்து, சிறப்புரையாற்றினார்.

### ஈரோடு மக்களவைத் தொகுதியினுடைய ரயில்வே பிரச்சினைகள் – கோரிக்கைகளை

# கண்காணிக்க - தொடர்ந்து நடவடிக்கை எடுக்க ஒன்றிய அரசு தனி அமைப்பு உருவாக்கியுள்ளதா?

## மக்களவையில் ஈரோடு எம்.பி. கே.இ.பிரகாஷ் பேச்சு!

புதுடெல்லி, ஜுலை 31 -

மக்களவையில் ஈரோடு தொகுதி எம்.பி. கே.இ.பிரகாஷ் எழுப்பிய கேள்வியும் -ஒன்றிய அமைச்சரின் பதிலும் வருமாறு :-

ஈரோடு மக்களவைத் தொகுதியைச் சேர்ந்த மக்கள் எதிர்கொள்ளும் ரயில்வே சேவைகளுடன் தொடர்புடைய பல்வேறு பிரச்சினைகள் குறித்த கோரிக்கைகள் அந்தத் தொகுதியின் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி அந்தக் கோரிக்கையினை ஒன்றிய அரசிடம் முன் வைக்கப்பட்டுள்ளது என்பதை அமைச்சகம் அறிந்துள்ளதா?

அவ்வாறு அறிந்திருந்தால், மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்த விவரங்கள் என்ன?

தொகுதி மட்டத்தில் எழுப்பப்படும் இப்படியான கோரிக்கைகள் மற்றும் பிரச்சினைகளை தீர்க்கும் தற்போதைய முறையில் ஏற்பட்டுள்ள தாமதத்திற்கு காரணம் என்ன?

(மக்களவை உறுப்பினர்கள் எழுப்பும் தொகுதி தொடர்பான ரயில்வே பிரச்சனைகள் மற்றும் கோரிக்கைகளை கண்காணிக்கவும் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கவும் ஒன்றிய அரசு தனி அமைப்பு அல்லது வாரியம் முறையொன்றை அமைக்கும் திட்டம் ஏதேனும் உள்ளதா? அவ்வாறு இருந்தால் அதன் விவரங்கள் என்ன? என ஈரோடு தொகுதி எம்.பி. கே.இ.பிரகாஷ் ரயில்வே ரயில்வே அமைச்சரிடம் கேள்வி எழுப்பினார்.

**ஒன்றிய அரசின் பதில் வருமாறு:-**

ஈரோடு தொகுதியை சார்ந்த வகையில், மேம்பாலங்கள், நிலத்தடி பாலங்கள், ரெயில்வே நீர்வழிப் பாலங்கள், ரெயில்களில் நிறுத்தங்கள் வழங்குவது போன்றவை தொடர்பாக பல்வேறு கோரிக்கைகள் பெறப்பட்டுள்ளன.

மேம்பாலங்கள் மற்றும் நிலத்தடி பாலங்கள் ஆகியவை நிலைதடைகளை மாற்றி அமைக்க உருவாக்கப்படும். இவ்வகையான பணிகள் இந்திய ரெயில்வேயில் தொடர்ச்சியாக நடக்கும் பணியாகும்.

இந்த பணிகள் ரெயில்வே பாதுகாப்பு, தாமதமின்றி ரெயில்கள் இயக்கப்படுவதில் அதன் தாக்கம், சாலை பயணிகளின் நலன் போன்றவற்றின் அடிப்படையில் முன்னுரிமையுடன் மேற்கொள்ளப்படுகின்றன.

01.04.2025 தேதியின் படி, இந்திய ரயில்வேயில் மொத்தமாக 4,402 மேம்பாலங்கள் / நிலத்தடி பாலங்களுக்கு ஒப்புதலளிக்கப்பட்டுள்ளன. இதற்கான மொத்த செலவு ரூ. 1,00,860 கோடி. இதில் தமிழகத்தில் மட்டும் 235 ROBs/RUBs ரூ. 4,669 கோடி செலவில் திட்டமிடப்பட்டு, செயலாக்கத்திலுள்ளன.

ஈரோடு மக்களவை தொகுதியில் தற்போது 13 மேம்பாலங்கள் ஒப்புதலாகியுள்ளன. இதில் 3 ROBs, பொதுமக்கள் கேட்டகுறுக்கு ரயில் கட்டுப்பாட்டு இடங்களில் (LC) அமைக்க ஒப்புதலளிக்கப்பட்டவை.

தற்போது, ஈரோடு, கொடுமுடி, பாசூர் மற்றும் இங்கூர் ஆகிய ஈரோடு தொகுதியில் உள்ள முக்கிய ரயில் நிலையங்களில் இந்த நிலவரம் உள்ளது:

ஈரோடு - 174 ரயில்கள் (இதில் 4 வந்தே பாரத் ரயில்கள் அடங்கும்), கொடுமுடி - 14 ரயில்கள், பாசூர் - 8 ரயில்கள், இங்கூர் - 6 ரயில்கள்

ரயில்களின் நிறுத்தம் மற்றும் நேரங்கள் சீரமைத்தல் போன்றவை தொடர்ச்சியான செயல்முறையாக நடைபெற்று வருகின்றன. இது போக்குவரத்து தேவைகள் மற்றும் தொழில்நுட்ப சாத்தியக்கூறுகளைப் பொருத்தே அமைகிறது.



**உள்கட்டமைப்பு வழங்கல்!**

ரயில்வே அமைச்சகம் “அமிர்த் பாரத் நிலைய திட்டம்” என்ற பெயரில், ரயில்வே நிலையங்களை நீண்டகால திட்டமிடலுடன் தொடர்ந்து மேம்படுத்தும் நோக்கில் தொடங்கியுள்ளது. இந்த திட்டத்தின் கீழ் ஒவ்வொரு நிலையத்திற்கும் ஒரு மாஸ்டர் திட்டம் தயார் செய்யப்படுகிறது, மேலும் அதனை கட்டப்படியாக அமல்படுத்தி பல்வேறு வசதிகளை மேம்படுத்துகிறார்கள்.

இந்த வசதிகளில் பின்வரும் அம்சங்கள் அடங்கும்:

நிலையத்திற்கு செல்வதற்கான பாதைகள், சுற்று பகுதி மேம்பாடு,

காத்திருக்கும் ஹால்கள், கழிப்பறைகள், லிப்ட்/எஸ்கலேட்டர்கள்,

மேடை மேற்பரப்புகள், மேடையின் மேல் கூரை,

சுத்தம், இலவச வைஃபை, “ஒன் ஸ்டேஷன் ஒன் புராடக்ட்” திட்டம் மூலம் உள்ளூர் தயாரிப்புகள் விற்கும் கடைகள், பயணிகள் தகவல் வழங்கும் அமைப்புகள், எக்ஸிக்யூட்டிவ் லவுஞ்சுகள், வணிக சந்திப்புகளுக்கான இடங்கள், பூங்கா போன்ற பசுமை மேம்பாடுகள்

இந்தத் திட்டம் நிலைய கட்டிடங்கள், இருபுற நகரங்களுடனும் இணைப்பு, பல்வேறு போக்குவரத்து முறைகளுடன் ஒருங்கிணைப்பு, மாற்றுத் திறனாளிகளுக்கான வசதிகள், சுற்றுச்சூழலுக்கு ஏதுவான தீர்வு கள், பாலஸ்ட் இல்லாத தடங்கள் போன்றவை தேவைக்கேற்ப செய்யப்படும். நீண்டகாலக் காலத்தில் இந்த நிலையங்களை நகர மையமாக மாற்றும் நோக்கமும் உள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் தற்போது 1,337 ரயில் நிலையங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இதில் தமிழகத்தில் உள்ள 77 நிலையங்கள் (உதாரணமாக ஈரோடு சந்திப்பு நிலையம்) அடங்கும். தமிழகத்தில் இந்தத் திட்டம் நல்ல வேகத்தில் நடைமுறைக்கு வருவதாகவும், 9 நிலையங்களின் (சிதம்பரம், குலித்துறை, மன்னார்குடி, பொளூர், சாமல்பட்டி, ஸ்ரீரங்கம், செயிண்ட் தாமஸ் மவுண்ட், திருவண்ணாமலை, விருத்தாச்சலம் சந்திப்பு) முதல் கட்ட மேம்பாட்டு பணிகள் முடிந்துள்ளன.

ஈரோடு ஜங்ஷன் ரயில் நிலையத்தில், சுற்றுப்புற பகுதியை (circulating area) மேம்படுத்துவது, பார்கிங் பகுதிகளைச் சீரமைப்பது மற்றும் புதிய வர்த்தகக் கட்டடம் கட்டும் பணி முடிந்துவிட்டது. மேலும், மேடை மேம்பாடு, புதிய மேடை கூரை, 12 மீட்டர் உயரம் கொண்ட மேம்பாலம் (Foot Over Bridge), லிப்ட் மற்றும் எஸ்கலேட்டர்கள் ஆகியவற்றுக்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நிலையங்களை மேம்படுத்தும் பணிகள் தொடர்ந்து நடைபெறும் செயல்முறையாகும். தேவைக்கேற்ப, நிதி நிலை மற்றும் முன்னுரிமையின் அடிப்படையில் வேலைகள் செய்யப்படுகின்றன. மேல்நிலைக் கட்டணத் தரம் கொண்ட நிலையங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. (Higher category of station over lower category of station)

**ஈரோடு ரயில்வே திட்டங்கள்:**

தமிழகத்தில் நடைபெறும் ரயில்வே திட்டங்கள் தெற்கு ரயில்வே, தென் மத்திய ரயில்வே மற்றும் தென் மேற்கு ரயில்வே ஆகியவற்றின் கீழ் வருகின்றன.

இந்தத் திட்டங்களின் விவரங்கள் இந்திய ரயில்வேயின் இணையதளத்தில் பொதுமக்கள் பார்வைக்காக வெளியிடப்பட்டுள்ளன.

2025 ஏப்ரல் 1 நிலவரப்படி, தமிழ்நாடு மாநிலத்தில் முழுமையாக வும்/ பகுதி வழியாகவும் உள்ள 15 திட்டங்கள் (9 புதிய பாதை, 3 அளவுமாற்றம் மற்றும் 3 இரட்டிப்பு) ஆகியவை, மொத்தமாக 1,700 கி.மீ நீளத்தில் 22,808 கோடி மதிப்பீட்டில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இத் திட்டங்களில் இருந்து, 665 கி.மீ நீளம் செயல்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது மற்றும் மார்ச் 2025 வரை 7,591 கோடி செலவிடப்பட்டுள்ளது.

ஈரோட்டில் ரயில் இணைப்பை மேம்படுத்துவதற்காக பின்வரும் ஆய்வுகள் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய அங்கீகரிக்கப்பட்டுள்ளன:

ஜோலார்பேட்டை ஈரோடு கோயம்புத்தூர் 3வது மற்றும் 4வது பாதை (282 கிமீ),

ஈரோடு கரூர் Doubling (67 கிமீ),

விரிவான திட்ட அறிக்கை முடிவுக்கு வந்த பிறகு, திட்டத்தை அங்கீகரிப்பதற்கு மாநில அரசுகள் உள்ளிட்ட பல்வேறு பங்குதாரர்களுடன் ஆலோசனை தேவைப்படுகிறது. மேலும், திட்டத்திற்கு அங்கீகாரம் பெற நிதி ஆயோக், நிதி அமைச்சகம் போன்றவற்றின் மதிப்பீடு அவசியம். திட்ட அங்கீகாரம் என்பது தொடர்ச்சியான செயல்முறை என்பதால், திட்டத்தின் துல்லியமான நேரத்தை நிர்ணயிக்க முடியாது.

தமிழ்நாடு மாநிலத்தில் நடைபெறும் முக்கியமான கட்டமைப்பு திட்டங்களின் செயல்படுத்தல் நிலம் அடையாளம் காண்பதில் சிக்கல் காரணமாக தாமதமாகியுள்ளது.


தமிழ்நாட்டில் நிலங்களை அடையாளம் காணும் செயல்முறையை வேகமாக முடிக்க தமிழ்நாடு அரசின் ஆதரவு தேவைப்படுகிறது.

இவ்வாறு ஒன்றிய அமைச்சர் பதிலளித்தார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வே. தங்கபாண்டியன்

### ஜுலை 31 (1997)



தென்பாண்டி மண்டலத்தில் கழகத்தை வளர்த்த முக்கிய தளகர்த்தர்களில் ஒருவராகத் திகழ்ந்தவர்.

மாவட்டக் கழகச் செயலாளராக தொடர்ந்து 23 ஆண்டுகள் பணியாற்றியவர்.

கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர். நெருக்கடி நிலையின்போது ஓராண்டு மிசா கைதியாக சிறைவாசம் அனுபவித்தவர்.

இருமுறை சட்டமன்ற உறுப்பினராகவும், இருமுறை சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும், கலைஞர் அமைச்சரவையில் 1996ஆம் ஆண்டு கூட்டுறவு – வணிகவரித்துறை அமைச்சராகவும் பணியாற்றியவர்.

காரியாப்பட்டி ஒன்றியப் பெருந்தலைவர், மல்லாங்கிணறு பேரூராட்சித் தலைவர் ஆகிய பொறுப்புகளை வகித்தவர்.

“மாவட்டச் செயலாளர் பணியில் வீரமிகு பாண்டியனாகவும், அமைச்சர் பொறுப்பில் பத்தரை மாற்றுத் தங்கமாகவும் திகழ்ந்தவர்” என தலைவர் கலைஞர் தமது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**